# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2284/34 - 2022 ජුනි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.06.16

*2284/34 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்***

பிரிவு *8* இன் கீழான கட்டளை

*2017* ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) *8* ஆம் பிரிவின் *(1)* ஆம் உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) பந்திகள் மூலம் எனக்குரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், *2213/39* ஆம் இலக்க *2021*, பெப்புருவரி *03* ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேட அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறான சட்டத்தின் *8* ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளையை (கட்டளை) பின்வருமாறு திருத்துகின்றேன்;

(I) அட்டவணையின் II ஆம் பகுதியின் பந்தி *1* இன் *(1)* ஆம் உப பந்தியிலும் பந்தி *2* இன் *(2)* ஆம் உப பந்தியின் (ஆ) விடயத்திலும் தோன்றுகின்ற **"ஐ. அ. டொலர். 15,000"** என்ற செற்கள் இத்தால் நீக்கப்பட்டு **"ஐ. அ. டொலர். 10,000"** என்ற சொற்கள் மூலம் பதிலீடு செய்யப்படுகின்றன.

(II) பின்வருவன உட்சேர்க்கப்பட்டு இக்கட்டளைக்கான அட்டவணையின் **பகுதி III** ஆக வாசிக்கப்படும்.

*(1)* இதிலுள்ள அட்டவணையின் பகுதி II இன் *1* ஆம் மற்றும் *2* ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி மற்றும் பெறுமதி மட்டுப்பாடுகள் எவ்வாறிருப்பினும், சட்ட ரீதியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு அவரது உடமையில் அவ்வாறு வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற எவரேனும் ஆள், **இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து பதிநான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட பொதுமன்னிப்பு மற்றும் அதற்கு பிந்தாத காலப்பகுதியினுள்**, அத்தகைய வெளிநாட்டு நாணயத்தின் சட்டரீதியான பெறுகையுடன் தொடர்புடைய அவசியமான சான்றுப்படுத்தலை உரிய அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு சமர்ப்பிப்பதன் மீது,

அ. அத்தகைய ஆளின் பெயரில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் திறந்து பேணப்படுகின்ற தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு, விடயத்திற்கு ஏற்றவாறு, அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை வைப்புச்செய்யலாம்; அல்லது

ஆ. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் ஒருவருக்கு அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை விற்பனைசெய்யலாம்.

(2) மேலே II (1) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு அல்லாமல் வேறுவிதமாக பெற்று அவரது உடமையில் வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கின்ற இலங்கையிலுள்ள அல்லது வதிகின்ற எவரேனும் ஆள் **இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து பதிநான்கு (14) வேலை நாட்களைக் கொண்ட பொதுமன்னிப்பு மற்றும் அதற்கு பிந்தாத காலப்பகுதியினுள்,** அவ்வாறு வைத்திருக்கும் அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவருக்கு விற்பனைசெய்வதற்கு கட்டாயமாக வேண்டப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின் பிரிவு 11 இன் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைவாக இக்கட்டளையில் எடுத்துரைக்கப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருக்கும் காலப்பகுதிக்கு அப்பால் அவரது உடமையில் வெளிநாட்டு நாணயத் தாள்களை வைத்திருக்கின்ற அத்தகைய ஆள்கள் மீதும் இக்கட்டளையின் ஏதேனும் மீறுகைக்கு அல்லது எல்லை மீறுகைக்கு எதிராக நடவடிக்கை முறைகளைத் தொடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கி உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு.

நிதி அமைச்சு,
கொழும்பு,
2021, யூன் 13.

இக்கட்டளையின் நோக்கத்திற்காக -

"சட்டம்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்பது பொருளாகும்;

"அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆள்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"இலங்கையில் வதிகின்ற" என்பது, திருத்தப்பட்டவாறான 2213/40 ஆம் இலக்க 2021.02.03 ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை (அதிவிசேட) அறிவித்தலில் வெளியிடப்பட்டவாறு 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 31 இன் கீழ் வழங்கப்பட்ட கட்டளையின் நியதிகளுக்கமைவாக அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

EOG 06 - 0161

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.